தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ்

BY RPAD / EMAIL




அனுப்புதல்:
அ.வசந்த குமார்,
438 பி - சீரடி சாய் R.K. இல்லம்,
பென்னாகரம் மெயின் ரோடு,
குமாரசாமி பேட்டை,
தருமபுரி - 636 701.

பெறுதல்:
பொது தகவல் அலுவலர் அவர்கள்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை/
தருமபுரி மாவட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டு சங்கம்,
தருமபுரி -636 705

ஐயா / அம்மா,

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் தேவைப்படும் கீழ்கண்ட தகவல்களை அளிக்க வேண்டுகிறேன்.

தேவைப்படும் தகவல்கள் / நகல்கள் :

1. மேல்முறையீட்டு அலுவலர் ந.க.எண். 180/2018/ஆர்.14 நாள் 26.06.2020 கடிதத்தில் " மனுதாரர் கோரியுள்ள தகவல் அனுப்பும் பொருட்டு பதிவரையில் தேடியபோது கோப்புகள் சிதைவடைந்த நிலையில் உள்ளதால் தகவல்கள் சேகரிக்க இயலவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவைப்படும் தகவலகள் :

1a. சிதைவடைந்துள்ள கோப்புகளின் எண்ணிக்கை.
1b. சிதைவடைந்துள்ள அந்த கோப்புகளின் எண்கள் விவரம்.

2. தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகத்தின் பணியாளர்கள் பணியாற்றிய STED திட்டத்தில் இவர்கள் பணி சம்மந்தமானவைகளுக்காகவும், இதர நடவடிக்கைகளுக்காகவும் தற்போது நடவடிக்கையில் உள்ள கோப்புகளின் எண்ணிக்கை மற்றும் அந்த கோப்புகளின எண்கள் விவரம் அளிக்க வேண்டுகிறேன்

3. மேல்முறையீட்டு அலுவலர் ந.க.எண். 180/2018/ஆர்.14 நாள் 26.06.2020 கடிதத்தில் எனது 18.03.2020 மனுவின் மீதான தகவல்களை "தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2 (f) ன் கீழ் தருவதற்கு வாய்ப்பு இல்லை . . ." என தெரிவிக்கப்பட்டுள்ளது. "தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2 (f) ன் கீழ் என்ன காரணம் அல்லது காரணங்களால் தகவல் தருவதற்கு வாய்ப்பு இல்லை என்று தெரிவிக்கவில்லை. ஆகவே "தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2 (f) ன் கீழ் என்ன காரணம் அல்லது காரணங்களால் தகவல் தருவதற்கு வாய்ப்பு இல்லை என தகவல் அளிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

4. மாவட்ட அளவில் STED திட்டத்திற்காக அமைக்கப்பட்ட TASK FORCE COMMITTEE முன் STED திட்டமானது முடிக்கப்பட்டுவிட்டது என்ற மத்திய அரசின் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு, தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி மாவட்ட சமூகப்பொருளாதார மேம்பாட்டு சங்கம் மூலம் செயலாக்கப்பட்டு வந்த STED திட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் தீர்மானம் TASK FORCE COMMITTEE முன் வைக்கப்பட்டு அதன் அங்கீகாரத்துடன் முறைப்படி முடிக்கப்பட்டதா? என்னும் தகவல்

Scanned with CamScanner

5. சமூகப்பொருளாதார மேம்பாட்டு சங்கம் மற்றும் **TASK FORCE COMMMITTEE** தலைவரான மாவட்ட ஆட்சியருக்கு **STED** திட்டமானது முடிக்கப்பட்டுவிட்டது என்ற மத்திய அரசின் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு, தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி மாவட்ட சமூகப்பொருளாதார மேம்பாட்டு சங்கம் மூலம் செயலாக்கப்பட்டு வந்த **STED** திட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்ததற்கான அவரது ஆணை பெறப்பட்டதா? என்னும் தகவல்.

6. தருமபுரி மாவட்ட சமூகப்பொருளாதார மேம்பாட்டுச் சங்கத்தின் 01.04.2006 முதல் 31.03.2007 நிதியாண்டு தணிக்கை அறிக்கை நகல் 2006-2007 நிதியாண்டு வரவு - செலவு தொகை இனம், மாதம் வாரியாக.

7. தருமபுரி மாவட்ட சமூகப்பொருளாதார மேம்பாட்டுச் சங்கத்தின் 01.04.2007 முதல் 31.03.2008 நிதியாண்டு தணிக்கை அறிக்கை நகல் 2007-2008 நிதியாண்டு வரவு - செலவு தொகை இனம், மாதம் வாரியாக.

8. தருமபுரி மாவட்ட சமூகப்பொருளாதார மேம்பாட்டுச் சங்கத்தின் 01.04.2008 முதல் 31.03.2009 நிதியாண்டு தணிக்கை அறிக்கை நகல் 2008-2009 நிதியாண்டு வரவு - செலவு தொகை இனம், மாதம் வாரியாக.

9. 11.03.2003 ல் **STED** திட்டப் பணியிலிருந்து என்னை விடுவித்தபோது திருத்தியமைக்கப்பட்ட ஊதியத்திற்கான நிலுவைத்தொகை 01.07.1999 முதல் நிலுவையில் இருந்தது. **PAY REGISTER** ல் இந்நிலுவைத்தொகை எனக்கு வழங்கப்பட்ட விவரம் வழங்கப்பட்டதற்கான விவரம் ஏதும் பதிவு செய்யப்பட்டு இருக்கிறதா என்னும் தகவல் தேதியுடன் அளிக்க வேண்டுகிறேன்.

10. எனது 5.08.2020 தேதி விண்ணப்பத்தின் மீது மீது இந்த விண்ணப்பம் தங்கள் அலுவலகத்தில் பெற்று கொண்டது முதல் நாளது வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் விவரம்.

11. எனது 20.10.2020 விண்ணப்பத்தின் மீது இந்த விண்ணப்பம் தங்கள் அலுவலகத்தில் பெற்று கொண்டது முதல் நாளது வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் விவரம்.

12. எனது பணிப் பதிவேட்டின் (service register) அனைத்து பக்கங்களின் நகல்

13. கீழ்கண்ட கடித நகல்கள் / தகவல் வழங்க வேண்டுகிறேன்:

1. ஊரக வளர்ச்சி இயக்குனர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14921/2000/எச் 2 நாள் 10.03.2004.
2. தருமபுரி மாவட்ட சமூகப்பொருளாதார மேம்பாட்டுச்சங்கம் கடிதம் எண் 183/2000/அ2/நாள் 9.01.2005.
3. தருமபுரி மாவட்ட சமூகப்பொருளாதார மேம்பாட்டுச்சங்கம் கடிதம் எண் 183/2000/அ2/நாள் 7.9.2006.
4. ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்துராஜ் இயக்குனர் கடிதம்.எண் 6584 / 05 /ஓய்வூதியம்-5 நாள் 15.4.2005

தருமபுரி மாவட்ட சமூகப்பொருளாதார மேம்பாட்டுச் சங்க ( முன்னாளில் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்) பணியாளராக 27.01.1989 தேதியில் பணியாற்ற தொடங்கி 26.02.1991 ல் தகுதி காண் பருவம் முடித்து, **Selection Grade** பெற்று எந்தவிதமான **blemish records** பதிவும் இல்லாமல் 14 வருடங்களுக்கு மேல் பணி அனுபவத்துடன் உதவி மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி அலுவலர் என்ற பணியிடத்தில பணியாளராக பணியாற்றி வந்த நிலையில் தருமபுரி மாவட்ட சமூகப்பொருளாதார மேம்பாட்டுச் சங்க ( முன்னாளில் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்) நிர்வாக கோளாறுகளால் எனக்கு பணியிடம் இல்லையென 11.03.2003 நான் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு 30.06.2018 தேதியில் பணியிலிருந்து ஓய்வு ஆணை வழங்கப்பட்டது வரை நான் எனது உரிமைகளை இழந்துள்ளேன். உரிமைகளை மீட்டெடுக்க சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மீது நிர்வாகங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் எனக்கு அநீதி இழைத்து வருவதால் நீதிமன்றத்தில் முறையிடும் அவசியம் எழுந்துள்ளது. இதற்காக தயாரிக்கப்பட உள்ள ஆவணப்படுத்துகைக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் கேட்கப்பட்டுள்ள மேற்கண்ட தகவல்கள்/ஆவண நகல்கள் அவசியமாகின்றன எனபதால் உரிய காலத்திற்குள் வழங்க வேண்டுகிறேன்.

தகவலுக்கான கட்டணம் நீதிமன்ற வில்லையாக செலுத்தப்பட்டு உள்ளது.

தருமபுரி

27..01.2021

தங்கள் உண்மையுள்ள,

Scanned with CamScanner